


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## நவம்பர் - 25.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்










## தமிழக நிகழ்வுகள்

- **சுதந்திரப் போராட்ட வீரரும் தமிழக முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் நினைவு மண்டபத்தை முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்.**
    - கடலூர் மஞ்சக் குப்பம் மைதானத்தில் ராமசாமி படையாச்சியார் நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது.
    - ராமசாமி படையாச்சியார் பிறந்த நாளை தமிழக அரசு, அரசு விழாவாக கொண்டாடும் என முதல்வர் அறிவித்துள்ளார்.
    - **செய்தி துளிகள்**
        - எஸ்.எஸ் ராமசாமி படையாச்சியார் "தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியினை தோற்றுவித்தார்."
        - 1954-ம் ஆண்டு காமராஜர் ஆட்சிகாலத்தில் உள்ளாட்சி துறை அமைச்சராக பதவி வகித்தார்.
        - கடந்த ஜுலை மாதம் 20-ம் தேதி தமிழக சட்டமன்ற வளாகத்தில் ராமசாமி படையாச்சியின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது

## தேசிய நிகழ்வுகள்

- **வரும் டிசம்பர் மாதம் "ஃபிட் இந்தியா வாரம்"** (உடலை உறுதியாக வைப்பது) **இயக்கத்தை மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் நடத்தவுள்ளதாக பிரதமர் மோடி அறிவிப்பு**
    - கடந்த ஆகஸ்ட் 29-ம் தேதி பிரதமர் மோடி "ஆரோக்கிய

இந்தியா (Fit India)” இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

- பள்ளி மாணவர்களுக்கு இத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த டிசம்பர் மாதம் “ஃபிட் இந்தியா வாரம்” கடைபிடிக்கப்பட உள்ளது
- **செய்தி துளிகள்**
    - ஆகஸ்ட் 29-ம் தேதி இந்தியாவில் தேசிய விளையாட்டு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
    - “ஆரோக்கிய இந்தியா” திட்டத்தை மத்திய விளையாட்டு துறை அமைச்சகம் செயல்படுத்துகிறது.
    - ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29-ம் தேதி குடியரசு தலைவரால் விளையாட்டு துறையில் சாதனை படைத்தவர்களுக்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா, அர்ஜுனா மற்றும் துரோணாச்சாரியார் விருது வழங்கப்படும்

- **உலக அளவில் மருத்துவத் துறையின் வளர்ச்சி 2022-ம் ஆண்டு 5.4% ஆக இருக்கும் என ஆய்வறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
    - தற்போது 73.5 ஆண்டுகளாக இருக்கும் உலக மனித சராசரி ஆயுள்காலம் 74.4 ஆண்டுகளாக அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்
    - இந்திய மருத்துவத் துறையில் ஜுன் 2019 நிலவரப்படி, துணை சுகாதார மையங்களின் எண்ணிக்கை 1,68,418 ஆகவும், ஆரம்ப சுகாதார மையங்களின் எண்ணிக்கை 33,476

ஆகவும் உள்ளது.

- **செய்தி துளிகள்**
    - இந்தியாவில் வழங்கப்படும் மருத்துவ காப்பீடு திட்டங்கள்

1. ஆயுஷ்மான் பாரத் (இந்தியா முழுவதும் மத்திய அரசின் திட்டம்)
2. ஆரோக்கிய ரக்ஷா (ஆந்திர மாநிலத்தில்)
3. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் (தமிழகம்)

## விளையாட்டு செய்திகள்

- **வங்கதேசத்துக்கு எதிரான முதல் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில்** இன்னிங்ஸ் மற்றும் **46 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றுள்ளது**.
    - இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 12-வது தொடரை வென்றது இந்திய அணி
    - இந்த வெற்றியின் மூலம் ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் 360 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் இந்திய அணி உள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் மொத்தம் 9 நாடுகளைச் சேர்ந்த அணிகள் மோதுகின்றன.
        - புள்ளிபட்டியலில் முதல் இரண்டு இடங்களை

பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டி இலண்டன் லார்ட்ஸ மைதானத்தில் நடைபெற உள்ளது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய மாணவர் படை தினம் - நவம்பர் 24**
    - "ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்" என்பதை குறிக்கோளாக கொண்டு தேசிய மாணவர் படை 1948-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
    - இந்திய தேசிய மாணவர் படைச் சட்டம் 1948 இதன் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது.
    - தேசிய மாணவர் படையின் கீழ் 3 பெரும் பிரிவுகள் உள்ளன.

1. தரைப்படை அணி
2. வான்படை அணி
3. கடற்படை அணி

- **செய்தி துளிகள்**
    - 1965 மற்றும் 1971-ம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் போரில் இரண்டாம் வரிசை அணியாக தேசிய மாணவர் படை அணி செயல்பட்டது.

## திருக்குறள்

**குறள் எண்: 28**

அதிகாரம்: நீத்தார் பெருமை

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: பாயிரம்

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**

**விளக்கம்:** நிறைவான வாக்குப் பெருமை உடைய மேன் மக்களின் உயர்வை, அவர்கள் இவ்வுலகில் சொன்ன மந்திரச் சொற்களே அடையாளம் காட்டிவிடும்.

We Shine Academy™